2013 மே 8]

435—

பயணியர் விடுதி

*20469—**திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருக்கொள்ளிக்காடு பொங்கு சனீஸ்வரர் திருக்கோயிலில் சுற்றுலாத் துறைமூலமாக, பயணியர் விடுதி கட்டவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இந்தியாவில் கங்கை ஆறு, யமுனை ஆறு, பாலாறு என்று பல ஆறுகள் உண்டு. ஆனால், வற்றாத ஒரே ஆறு, அம்மா உங்கள் வரலாறு! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, விடையை அளிக்கின்றேன்.

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருக்கொள்ளிக்காடு பொங்கு சனீஸ்வரர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக ரூபாய் 20 இலட்சம் செலவில் அனைத்து அடிப்படை வசதிகளையும் வழங்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். தனியாக பயணியர் விடுதி கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், இதுகுறித்த செயற்குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து கருத்துருவாகப் பெறப்படும்பட்சத்தில், நிதியாதாரத்திற்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியோடு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியம், கீராலத்தூர் ஊராட்சி, திருக்கொள்ளிக்காடில் இருக்கக்கூடிய பொங்கு சனீஸ்வரர் திருக்கோயிலுக்கு கேரளா,*

ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களிலிருந்தும், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலிருந்தும், தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் சாமியைத் தரிசனம் செய்ய வருகின்றார்கள். திருநள்ளாறு சனீஸ்வரர் திருக்கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்கள் அத்துணை பேரும், இங்கேயும் வந்து செல்லக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. சென்ற ஆண்டு சனிப் பெயர்ச்சி அன்று, கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் பக்தர்கள் அங்கே வந்ததாகச் சொல்கின்றார்கள். இப்பொழுதும் ஒவ்வொரு சனிக்கிழமைதோறும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் வந்து கொண்டிருக்கின்றார்கள்.

அதோடுமட்டுமல்லாமல், இலங்கையிலே தமிழர்களைக் கொன்று குவிக்கக்கூடிய இலங்கை அரசின் முன்னாள் அதிபர் ரணில் விக்ரமசிங்கே அவர்கள்கூட, 2008 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 20 ஆம் தேதி அங்கே வருகை தந்தபோது, 'தமிழர்களை மட்டும் பிடிக்காது; தமிழ்ச் சாமியைப் பிடிக்குமா?' என்று நாங்கள் கோரிக்கை எழுப்பி, அவரது வருகையைத் தடுத்தோம். இருந்தாலும், அன்றைய மத்திய அரசாங்கத்தினுடைய காவல் துறையின் உதவியோடு சாமி தரிசனம் செய்துவிட்டுச் சென்றார். ஆகவே, இப்படிப்பட்ட சிறப்புக்குரிய பொங்கு சனீஸ்வரர் திருக்கோயிலுக்குப் பக்தர்கள் வந்து தங்கிச் செல்வதற்கு வசதியாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு பயணியர் தங்கும் விடுதியை அமைத்துத் தந்தால், பயனுள்ளதாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனைச் செய்து தர முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டியிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் திருக்கொள்ளிக்காடு பொங்கு சனீஸ்வரர் திருக்கோயில் உள்ளது. சனி தோஷம் போக்குவதில் திருநள்ளாறைப்போல இந்தத் திருத்தலமும் சிறப்புப் பெற்றது. இந்தக் கோயிலுக்கு அருகில் மன்னார்குடி ராஜகோபாலசுவாமி திருக்கோயில், நவகிரகத் தலங்களில் ஒன்றான குரு ஸ்தலம் ஆலங்குடி மற்றும் கூத்தனூர் சரஸ்வதி கோயில் அமைந்துள்ளன. ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, அடிப்படை வசதிகளுக்காக ஒப்பளிக்கப்பட்டுள்ள 20 இலட்சம் ரூபாயில், அருள்மிகு சனீஸ்வரர்

திருக்கோயில் அமைந்துள்ள பகுதியில் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி மற்றும் பொருட்கள் வைப்பறை கட்டுவதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

முற்பகல் 10–35

மாண்புமிகு உறுப்பினர், "பயணியர் விடுதி அமைக்க வேண்டும்" என்று கோரியுள்ளார். இத்திருத்தலத்திற்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை குறித்து மாவட்ட ஆட்சியரிடமிருந்து கருத்துரு மற்றும் உரிய திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டவுடன், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், ஒவ்வொரு திருத்தலத்தின் தேவைகளையுமே கேட்காமல் செய்யக்கூடிய வள்ளல் எங்கள் அம்மா என்பதையும் பணிவுடன் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், சென்ற ஆண்டு 20 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டு, கட்டமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, அந்த வகையில், அக்கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்களின் நலன் கருதி, அங்குள்ள குளத்தைத் தூர்வாரி, சுத்தம் செய்து கொடுப்பதோடு, சாலை வசதிகளையும், கட்டமைப்பு வசதிகளையும் செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, தமிழகத்தின் விடி வெள்ளியாகத் தோன்றும் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, சம்பந்தப்பட்ட துறை நடவடிக்கை மேற்கொண்டு, அதன்படி, நிறைவேற்ற வாய்ப்பு இருப்பின், பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*